பக்கங்கள் 16+ 04

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை 13.04.2025 | அதிர்வு 253

பிறந்து 21 நாள்களேயான

## பெண் குழந்தை எறும்பு கடித்து பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணத்தில் துயரம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் பிறந்து 21 நாள் களேயான பெண் சிசு ஒன்று 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று

# தேர்தலை மே 6 இல் நடத்தி முடிக்க முடிவு

## உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யும் யோசனையை கைவிட்டது தேர்தல் ஆணையம்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளைப் பொறுத்தவரை உயர்நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் அடிப்படையில் முரண்பாடான தீர்ப்புகளை வழங்கி இருக்கையில், நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்பது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அப்படியே ஏற்று - அந்த உத்தரவுப்படி உரிய வேட்பு மனுக்களை சேர்த்துக் கொண்டு - அதன் அடிப்படையில் திட்டமிட்டபடி உள்ளூராட்சித் தேர்தல்களை மே 6 ஆம் திகதி முழுமையாக நடத்தி முடிப்பதற்கு தேர்தல் ஆணையம் முடிவு செய்திருப்பதாக நம்பகமாகத் தெரிய வருகிறது. 02

# 2 பெண்களுடன் கடத்திச் செல்லப்பட்ட கார் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு!



### கொட்டாஞ்சேனையில் சம்பவம்

நபர் ஒருவரால் கொட்டாஞ்சேனையில் கடத்திச் செல்லப்பட்ட கார் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை இரவு கொட்டாஞ்சேனையின் வாசல வீதியில், இயங்கும் நிலையில் தனது காரை நிறுத்தி விட்டு, உணவு வாங்குவதற்காக உணவகத்துக்குள் காரின் உரிமையாளர் சென்றார். காரில் கர்ப்பிணியான மனைவியையும் தயாரையும் அவர் விட்டுச் சென்றார்.

அப்போது ஒரு சந்தேகநபர் 02

# பலத்த அடிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

அடிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

குருநாகல் பொலிஸ் பிரிவில் உள்ள ஜெயந்திபுர வீதியில் இருந்து நேற்று சனிக்கிழமை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

குறித்த சடலத்தில் பலத்த அடிகாயங்கள் காணப்படுகின்றன என்றும், சடலம் இதுவரை யாருடையது என அடையாளம் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இறந்தவர் சுமார் 55 வயதுடையவர் என்றும், 5 அடி 6 அங்குல உயரம் உடையவர் என்றும், நீல நிற முழுக்கை சேட் மற்றும் காற்சட்டை அணிந்தவர் என்றும் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### அன்னராசாவின் செய்தி தொடர்பில்

# வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்ட தெளிவுபடுத்தல் விளக்கம்

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளர் அ.அன்ன ராசா தெரிவித்தார் என்று ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெளிவுபடுத்தல் விளக்கத்தை வழங் கியுள்ளது.

'யாழ்ப்பாணக் கடலை ஆக்கிரமிக்கும் சீனக் கடலட்டை பண்ணைகள் தொடர் பில் நாம் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றோம். கடந்த 11ஆம் திகதி வேலணைக்கு வரும் பிரதமர் ஹரிணி அமரசூரியவின் கவனத்துக்கும் இந்த விடயத்தைக் கொண்டு செல்வதற்கு முயற்சிக்கின்றோம். இவை தொடர்பில் முற்கூட்டியே அறிந்துகொண்ட ஆளுநர் செயலகம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் பிரதமர் வருவதற்கு முன்பாக, கடல் அட்டைப் பண்ணைக ளுக்காகக் கடல் முழுவதும் அமைக்கப் பட்டிருந்த பிளாஸ்ரிக் தடுப்பு வேலிகள் அவசரஅவசரமாகஅகற்றப்படுகின்றன' என அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருப் பதைப் போன்று 'ஆளுநர் செயலகம் எந்தவொரு தகவல்களையும் வழங் கவில்லை' என்று தெளிவுபடுத்துகின் றோம். அத்துடன் இந்த விடயத்துக்கும் ஆளுநர் செயலகத்துக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்பதையும் அறி யத்தருகின்றோம் என்று வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளது.

யாழ். ஆலடி, உடுவில், மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த தம்பதியினருக்குக் கடந்த 22 ஆம் திகதி பெண் சிசு பிறந்தது.

அந்தச் சிசுவுக்கு நான்கு நாள்களுக்கு முன்னர் எறும்பு கடித்த நிலையில் அதனைப் பெற்றோர் கவனிக்காமல் விட்டதன் காரணமாக நேற்று சனிக்கிழமை பால் குடித்த சிசு மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கு சிசு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

உடற்கூற்றுப் பரிசோதனையில், எறும்பு கடித்ததன் காரணமாக கிருமித் தொற்று ஏற்பட்டு உடற்கூறுகளின் செல்கள் செயலிழந்தமையால் மரணம் சம்பவித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை தேர்தல் ஆணைக்குழுவுக்கும் சட்டமா அதிபருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் தேர்தலை மேன்முறையீட்டு நீதிமனந்த் தீர்ப்பை உள்வாங்கி, அந்த நீதிமன்றம் குறிப்பிட்ட வேட்பு மனுக்களை ஏற்றுக் கொண்டு, அவற்றையும் சேர்த்து மே 6ஆம் திகதி திட்டமிட்டபடி தேர்தலை ஒன்றாக நடத்தி முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கு இன்று பிற்பகலில் தேர்தல் ஆணையம் வழிகாட்டல் வழங்கி இருப்பதாகத் தெரிய வருகின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுகள் உயர்நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய உத்தரவுக்கு முரணாக இருக்கின்றமையால் மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்திடம் மேன்முறையீடு செய்ய வேண்டும் என்று யோசனையை இன்று காலை சட்டமா அதிபருடனான கலந்துரையாடலின் பின்னர் தேர்தல் ஆணையம் கைவிட்டு விட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது.

தேர்தல் ஆணையத்தின் இந்த முடிவுக்கு எதிராக சுயாதீனத் தரப்புகள், ஜனநாயக விடயங்களில் ஈடுபாடு உள்ள அரசு சார்பற்ற நிறுவனங்கள் போன்றவை உயர்நீதிமன்றத்திடம் முறையீடு செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகி இருப்பதாகத் தெரிகிறது.

இது நீதிமன்ற விடுமுறை காலமாயினும் நாட்டின் ஜனநாயக விழுமியத்தை பாதிக்கும் மோசமான நடவடிக்கைகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்று கருதப்படுவதால், இந்தச் சமயத்திலும் உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட வேண்டும் என்று சில தரப்புகள் முனைப்பாக இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

பிறப்புச் சான்றிதழ் விவகாரத்தை ஒட்டி பல வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத் தில் முறையீடு செய்த தரப்புகளுக்கு மாத்திரம் நிவாரணத்தை வழங்கி, மற்றத் தரப்புகளை தேர்தலில் போட்டியிடாத நிலையை உறுதிப்படுத்தி, இந்த விடயத் தில் தேர்தல் ஆணையம் நடந்து கொள்வது குறித்து பலதரப்பினரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் இப்போது ஏற்றுக்கொள்ளும்படி உத்தர விட்டுள்ள வேட்பு மனுக்கள் தொடர்பான விடயத்தில், அதேபோன்ற பாதிப்பை வேறு தரப்புகள் எதிர்கொண்டு இருந்தால், அவர்களும் இனிமேல் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் போய் அதேபோன்ற நிவாரணத்தை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும் என்றும் சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அதற்கான கால அவகாசம் இன்னும் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. அப்படி புதிய தரப்புகள் மேன்முறையீட்டு நீதி மன்றத்தை நாடத் தொடங்கினால் தேர்தலைக் குறிப்பிட்ட திகதியில் தேர்தல் ஆணையம் நடத்திமுடிப்பது சிக்கலானதாக இருக்கும் என்று சுட்டப்படுகிறது.

## 2 பெண்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரில் ஏறி, இரண்டு பெண்களையும் உள்ளேயே வைத்துக்கொண்டு காரைக் கடத்தித் தப்பிச் சென்றார் .

அந்த நேரத்தில், விசாரணைக்காகக் கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு ஒரு ஓட்டோவில் வந்த மட்டக்குளி பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு, குறித்த கார் கடத்தப்பட்டமை குறித்து கிடைத்த தகவலின் பேரில், தப்பிச் சென்ற காரைப் பின்தொடர்ந்து சென்று நிறுத்து மாறு சமிக்ஞை செய்தனர்.

பொலிஸாரின் உத்தரவுகளை மீறி சந்தேகநபர் காரைத் தொடர்ந்து ஓட்டிச் சென்றதால் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

பின்னர், கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவில் உள்ள புளூமெண்டல் ரயில் பாதைக்கு அருகில் காரை நிறுத்திவிட்டு மேற்படி நபர் தப்பிச் சென்றார்.

காரில் இருந்த இரண்டு பெண்களும் காயமின்றி மீட்கப்பட்டனர் என்றும், சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படு கின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



# சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு

**(உடப்பு க.மகாதேவன்)**

உடப்பூர் இந்து நெறிக்கழகம், ஸ்ரீ கோகுலம் அறநெறிப் பாடசாலையின் ஆதரவில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகளை இன்று ஞாயிற்றுக்கிழமை (13) உடப்பு ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலய முன்றலில் நடத்தியது.

இதற்குரிய ஏற்பாட்டை உடப்பூர் இந்து நெறிக கழகத் தலைவர் பா.முருகானந்தன் முன்னின்று நடத்தினார். இதன்போது மாணவர்களின் பல நிகழ்வுகள் இடம்பெற்றன.







# பேசாலையில் குருத்தோலை திருப்பலி!

(வாஸ் கூஞ்ஞ)

அகில உலக திருச்சபையானது தவக்காலத்தை தொடர்ந்து இன்று (13) ஞாயிற்றுக்கிழமை குருத்தோலை ஞாயிறுடன் பரித்த வாரத்தில் தடம் பதித்துள்ளது.

இந்தக் குருத்தோலை ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்துடன் கத்தோலிக்க மக்கள் இறை இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் மாபெரும் புனித மறை நிகழ்வுகளை தியானிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

அன்று ஜெருசலேம் மக்கள் இறைமகன் இயேசுவை கழுதை ஒன்றின் மேல் இருத்தி குருத்தோலைகளை அசைத்து தாவிதின் மகனுக்கு ஓசானா ஓசானா என குரல் கொடுத்து அழைத்துச் சென்ற நிகழ்வு இன்று அகில உலக கத்தோலிக்க மக்களாலும் நினைவு கூறப்படுகின்றது.

இதன் நிகழ்வு மன்னார் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளில் ஒன்றான பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய மக்களால் பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளாரின் தலைமையில் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தெற்கின் சித்தாந்தம்

வழமை போல இப்போதைய உள்ளூராட்சித் தேர்தல் பிரசார சமயத்திலும் முன்னாள் ஆட்சித் தலைவர்களின் ஊழல்கள், மோசடிகள், லஞ்ச லாவண்யங்கள் பற்றி மேடை தோறும் முழங்கி வருகிறார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா. அவரது பிரதமரும், ஏனைய அமைச்சர்களும், ஆளுங்கட்சித் தரப்பினரும் அதையே - அந்தப் பழைய பல்லவியையே - பரப்புரையையே - தங்களுடைய பிரசார ஆயுதமாக இத்தேர்தலிலும் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர்.

ஏதோ முன்னைய ஆட்சிக்கால ஊழல், மோசடிகள் குறித்து முற்றாக விசாரணைகளை நடத்தி, குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வந்து விட்டோம் என்ற ஒரு மாயையை ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் காட்ட முயல்கின்றார்கள்.

மலையைக் கிண்டி எலியைப் பிடித்த மாதிரி அங்கொன்றும் இங்கொன்றுமாக சில விடயங்களில் புலனாய்வு நடவடிக்கைகள் முன்னேற்றம் கண்டிருந்தாலும், புதிய ஜனாதிபதியின் இந்த ஆறு மாத ஆட்சிக் காலத்தில் காத்திரமான அளவுக்கு புலனாய்வு எதுவும் முன்னேற்றம் அடைந்திருப்பதாகச் சிலாகிப்பதற்கு எதுவும் இல்லை என்பதுதான் உண்மை.

நாடு வங்குறோத்து நிலையை அடைவதற்குப் பிரதான காரணமாக அமைந்தது முன்னைய ஆட்சி காலத்தின் ஊழல், மோசடிகள், முறைகேடுகள் மட்டுமல்லாமல் அரச திட்டங்களுக்கான பயனுறுதி குறித்துப் பொறுப்பு கூறல் முறைமை சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதும்தான்.

'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைத்த மாதிர' ஊர் உலகமெல்லாம் கடன் வேண்டி, ஊதாரித்தனமான திட்டங்களை முன்னெடுத்த அரசு தலைமைகளே இத்தகைய மோசமான நிலைமை ஏற்பட்டமைக்கு பிரதான காரணமாகும். அது குறித்துப் புதிய அரசுத் தலைமை எதுவும் சிந்திப்பதாக - கவனம் எடுப்பதாக - சிரத்தை கொள்வதாக - தெரியவில்லை.

நாட்டை இன்னும் மீள முடியாத கடன் சுமைக்குள் ஆழ்த்திய மாத்தள சர்வதேச விமான நிலையக் கட்டுமானம், அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணம் என்று வெள்ளை யானைகளைக் கட்டித் தீனி போடும் திட்டங்களை கொண்டு வந்து, இன்றும் கூட அந்தக் கடன்களுக்கான தவணைப் பணத்தை மீளச் செலுத்த முடியாமல் நாடு நடு வீதியில் தவிக்கின்றது.

இப்படி ஊதாரித்தனமான திட்டங்களை நாட்டின் தலையில் கட்டி, மீள முடியாத நெருக்குவாரத்துக்குள் நாட்டைச் சிக்க வைத்த அரசுத் தலைமைகள் குறித்து - அவற்றின் கடந்த கால செயல்முறைகள் குறித்து - மக்கள் உண்மையைப் பேசி அதற்கான பொறுப்புக் கூறலை நிலைநாட்ட இந்த ஆட்சித் தலைமை தயார் இல்லை.

கடந்த கால ஆட்சித் தலைமைகளின் இத்தகைய பொறுப்பற்ற போக்குதான் கடந்த காலத்தில் இந்த நாட்டின் படைத்தலைமைகளிலும் தாராளமாக இருந்தது. அதனால்தான் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் படைத்தலைமைகளின் மோசமான நடவடிக்கைகள், அணுகுமுறைகள், செயற்பாடுகளினால் வகைதொகையின்றி கொல்லப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, காணாமலாக்கப்பட்டு, அழிந்து போனார்கள்.

அந்தக் காலத்தில் படைத்தலைமைகள் புரிந்த கொடூரங்களுக்கு நேரடியாகவே இன்று வரை காப்பரணாக இருந்து பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்து வரும் சிங்கள அரசியல் தலைமைகள், அதேபோல நாட்டைக் குட்டிச்சுவராக்கிய முன்னைய அரசியல் தலைவர்களையும் தலைமைகளையும் பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தாமல் காத்து நிற்கும் என்பது தென்னிலங்கையின் எழுதப்படாத அரசியல் சித்தாந்தம். அதில் மாற்றம் வராது.

தனிப்பட்ட முறையில் சில அரசியல் தலைவர்களின் ஊழல், மோசடி, முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்தி, அவை குறித்து பிரலாபித்து விட்டு, அதில் அரசியல் லாபம் தேடுவதோடு இந்த அரசுத் தலைமையும் அடங்கிவிடும் என்பதுதான் உண்மை நிலைமையாகும்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





## இறக்காம பிரதேச சபை தேர்தல் கூட்டம்!

(கே. ஏ. ஹமீட்)

இறக்காம பிரதேச சபைத் தேர்தல் தொடர்பான விசேட கூட்டம் வரிப்பத் தான்சேனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும் இறக்காமப் பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான எம்.ஐ.நைசர் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயலாளர் ஏ.சி.சமால்தீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உச்ச பீட உறுப்பினர் என்.எம்.ஆஷிக், தொழி லதிபர் ஏ.கே.அமீர், அன்சார் ஹாஜியார் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.




## மக்களுக்குச் சேவையாற்றுவதே நோக்கு!

### முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் றியா மசூர் தெரிவிப்பு

(றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்திகளையும், ஏழை, எளிய மக்களின் இன்ப துன்பங்களிலும் பங்கெடுத்து செயற்பட்ட ஒருவராக என்னுடைய தந்தை மக்களால் அடை யாளம் காணப்பட்டார். அவரது வழியில் செயற்பட்டு மக்களுக்குச் சேவையாற் றுவேன். மக்களுக்குச் சேவையாற்று வதே எனது ஒரே நோக்கு.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் அல் முனீரா வட்டாரத்தில் போட்டியிடும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், அட்டாளைச் சேனை பிரதேச சபையினுடைய முன் னாள் தவிசாளருமான மசூர் சின்ன லெப்பையின் மகன் தொழிலதிபர் றியா மசூர் தெரிவித்தார். அட்டாளைச்சேனை பிரதேச அல் முனீரா வட்டார ஆதரவா ளர்கள் மத்தி யில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந் தும் அவர் தனது உரையில்,

அட்டாளைச்சேனை பொது விளை யாட்டு மைதானம் தொடக்கம் பொதுச் சந்தை உட்பட பல்வேறு அபிவிருத் திகளை இப்பிராந்தியத்தில் எனது தந்தை அரசியல் அதிகாரத்தில் இருந்த போது இன, மத வேறுபாடுகளுக்கப்பால் செய்திருக்கிறார். அந்த வகையில் எனது தந்தை விட்டுச் சென்ற இடத்தை தொட்டுச் செல்வதற்காக நான் அரசிய லில் களமிறங்கியுள்ளேன்.

ஆகவே அட்டாளைச்சேனை பிரதேச வாக்காளர்களே என்னை உங்களது குடும்பத்தில் ஒருவராக, உங்களின் பிள்ளையாக, ஒரு சகோதரனாக நினைத்து வெற்றி பெறச் செய்வதன் மூலம் முடியுமான அபிவிருத்திப் பணி களை செய்து காட்டுவேன்.- என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





## தம்பிலுவிலில் தேர்தல் பரப்புரை!

(வி.ரி.சகாதேவராஜா )

திருக்கோவில் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவுக்கான ஆதரவுக் கூட்டம் தம்பிலுவில் ஆதவன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் தலைமை வேட்பாளர் பிரபல தொழிலதிபர் சுந்தரலிங்கம் சசிகுமார் மக்கள் மத்தியில் உரையாற்றினார்.



## தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் காரைதீவில்

(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய மக்கள் சக்தி கட்சியின் காரைதீவு 6,7, 10 ஆம் பிரிவுகளின் 4 ஆம் வட்டாரத்துக்கான தேர்தல் அலுவலகம் நேற்று (12) சனிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

அந்த நிகழ்வில் திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.ஆதம்பாவா மற்றும் மஞ்சுள ரத்நாயக ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக தேர்தல் பரப்புரை அலுவலகம் தேசிய மக்கள் சக்தியின் காரைதீவு பிரதேச ஆலோசகர் ரி. தெய்வநாயகம் முன்னிலையில் அதிதிகளால் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபையில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி சார்பான வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.



# உள்ளூர் உற்பத்தியாளரை ஊக்குவிப்பதன் மூலம் வறுமை ஒழிக்கப்பட்டு நாடு அபிவிருத்தி அடையும்!

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(சர்ஜூன் லாபீர்)

உள்ளூர் உற்பத்தியாளர்களையும் அவர்களின் உற்பத்திப் பொருள்களையும் ஊக்குவித்தல் மற்றும் சந்தை வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் நாட்டின் வறுமை இல்லாது ஒழிக்கப்பட்டு நாடு அபிவிருத்தி அடையும் என்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையில் சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்தி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட "சமுர்த்தி அபிமானி" வர்த்தக கண்காட்சியும் விற்பனையும் மற்றும் சிப்தொர புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. அந்த நிகழ்வுக்குத் தலைமையேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு முஸ்லிம், தமிழ் பண்டிகைகளையும் சிறப்பிக்கும் முகமாக இவ்வாறான சந்தைகளைக் கொண்டு நடத்துவது வழமையான விடயமாகும்.

இந்தச் சந்தையில் எமது உள்ளூர் உற்பத்திகளை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தியுள்ளோம். அந்த உள்ளூர் உற்பத்திகளை ஊக்கிவிப்பதற்கான வாய்ப்பாக இதனை அமைத்திருக்கின்றோம். அதன் அடிப்படையில் நாம் வாடிக்கையாளர்கள் எனும் வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

அதுபோல் இந்த உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை மேம்படுத்தி, உற்பத்தித் திறன்மிக்கதாக்குவதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துள்ளோம்.

குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மூலமாக இவர்களைப் பரிசீலனை செய்து அவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி இருக்கின்றோம்.

சமூர்த்தி திட்டம் மட்டுமன்றி உற்பத்தி திறன் சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏனைய துறைசார்ந்த உத்தியோகத்தர்களையும் இதில் இணைத்து அவர்களை மேற்பார்வை செய்து இந்த உற்பத்தியாளர்களுக்கு அறிவுரைகளையும் ஆலோசனைகளும் வழங்கி இருக்கின்றோம்.

இவ்வாறு அவர்களின் உற்பத்திகளை மேம்படுத்த கூடிய சகல செயற்பாடுகளையும் எமது அலுவலகம் ஊடாகவும் ஏனைய நிறுவனங்களின் ஊடாகவும் வழங்கி சிறப்பாக செய்து இருக்கின்றோம்.

எனவே எமது மக்களுக்காக உற்பத்தி செய்யபட்ட இந்தப் பொருள்களை நாங்கள் கொள்வனவு செய்வதன் ஊடாக அவர்களை ஊக்குவிக்க முடியும். அவர்களை விளம்பரம் செய்து நிரந்தர



சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கலாம் என்பதையும் தெரிவித்து கொள்கின்றேன்.

இங்கு வருகை தந்திருக்கும் சமூக மட்ட அமைப்புகளின் தலைவர்கள் இந்த உற்பத்தியாளர்களை ஊக்குவித்து அவர்களின் தொழில்சார் நடவடிக்கைகளுக்கு உதவ முன்வர வேண்டும்.– என்றார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஜெகராஜன், சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எ.பி.எம். ஹுசைன், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.எம். நளீர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.








# சந்தாங்கேணி ஐக்கிய மைதானத்தில் நீச்சல் தடாகம் மக்கள் பாவனைக்கு!

## முன்னாள் எம்.பி. ஹரீஸ் நடவடிக்கை

**(நூருல் ஹுதா உமர், சர்ஜூன் லாபீர்)**

கல்முனை பிராந்திய மக்களின் நீண்ட நாள் தேவையாக இருந்து வந்த நீச்சல் தடாகக்க குறையை நிவர்த்தி செய்யும் முகமாக விளையாட்டுத்துறை பிரதி அமைச்சராக இருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள நீச்சல் தடாக நிர்மாணப்பணிகள் நிறைவுக்கு வந்துள்ளது.

அதன் பூர்வாங்க நிர்மாண வேலைகளை பார்வையிடும் முகமாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

கொரோனா, பொருளாதார நெருக்கடிகள் என பல சவால்களை கடந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் முயற்சியின் பயனாக பல்வேறு கட்டங்களாக ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 110 மில்லியன் ரூபா நிதி மூலம் அமைக்கப்பட்டுள்ள இந்த நீச்சல் தடாகத்தை விளையாட்டுத் துறை அமைச்சிடம் இருந்து கல்முனை மாநகர சபை அடுத்த வாரமளவில் கையேற்று மக்கள் பாவனைக்கு கையளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பிலும் மேலும் இந்த நீச்சல் தடாக பராமரிப்பு, மேலதிக அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ், மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரிகளுடன் இதன்போது கலந்துரையாடினார்.

இந்த விஜயத்தின் போது மாநகர சபை உத்தியோகத்தர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாடல், ஊடக விவகார செயலாளர் யூ.எல்.நூருல் ஹுதா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நீச்சல் தடாகத்தின் மூலம் விளையாட்டு வீரர்களும், மாணவர்களும் நிறைவான பலனை அடைவதுடன் எதிர்காலத்தில் நீச்சல் போட்டிகள் மற்றும் பயிற்சிகளைப் பெற வசதியாக இருக்கும் என்றும் இந்த நீச்சல் தடாக நிர்மாண பணி கல்முனை மாநகர மக்களுக்கு மட்டுமல்ல ஏனைய பிரதேச மக்களுக்கும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# அமெரிக்காவின் அந்நிய நாடுகள் மீதான இறக்குமதித் தீர்வைகள் கொள்கைகள் சர்வதேச வர்த்தகப் போரை ஏற்படுத்தும்?

வர்த்தகப் போர் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் ஒருவருக்கொருவர் வணிகத் தடைகளை விதிப்பதன் மூலம் பொருளாதார ரீதியாக போட்டியிடும் ஒரு சூழ்நிலையாகும்.

பொதுவாக, ஒரு நாடு தனது உள்நாட்டு தொழில்களைப் பாதுகாக்கவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும், அல்லது பிற நாடுகளின் வணிக நடைமுறைகளுக்கு பதிலடி கொடுக்கவும் இறக்குமதி வரிகளை உயர்த்தும்.

இதற்குப் பதிலடியாக, பாதிக்கப்பட்ட நாடும் தனது ஏற்றுமதிப் பொருள்களுக்கு வரி விதிக்கலாம். இது ஒரு தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும், இறுதியில் இரு தரப்பு வணிகமும் பாதிக்கப்படும்.

வர்த்தகப் போர்கள் புதியவை அல்ல. வரலாற்றில் பலமுறை நிகழ்ந்துள்ளன. ஆனால், நவீன உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் இதன் விளைவுகள் மிகவும் பரவலானதாகவும் சிக்கலானதாகவும் இருக்கலாம். நுகர்வோர் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும், வணிகங்கள் தங்கள் விநியோகச் சங்கிலிகளை மாற்றியமைக்க வேண்டியிருக்கும், மேலும் ஒட்டுமொத்த உலகப் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படலாம்.

அமெரிக்காவின் சமீபத்திய வரி விதிப்பு நடவடிக்கைகள் இந்த வர்த்தகப் போருக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளன. அமெரிக்கா, பல நாடுகளுடனான தனது வர்த்தகப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி, குறிப்பாக சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அதிக வரிகளை விதித்துள்ளது. இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம், வெளிநாட்டுப் பொருள்களை விட அமெரிக்காவில் தயாரிக்கப்படும் பொருட்களை வாங்குமாறு அமெரிக்க நிறுவனங்களையும் நுகர்வோரையும் ஊக்குவிப்பதாகும்.

இந்த வரி விதிப்புகள் உடனடியாக மற்ற நாடுகளின் எதிர்வினைகளைத் தூண்டின. பாதிக்கப்பட்ட நாடுகள் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது பதிலடி வரி விதித்தன. உதாரணமாக, சீனா அமெரிக்காவின் விவசாயப் பொருள்கள் மற்றும் பிற பொருள்களுக்கு வரி விதித்தது. ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவின் சில பொருள்களுக்கு வரி விதித்தது. இந்தப் பதிலடி நடவடிக்கைகள் இரு தரப்பு ஏற்றுமதி மற்றும் இறக்குமதியையும் குறைத்தன. மேலும் வணிகங்களுக்கு நிச்சயமற்ற தன்மையை அதிகரித்தன.

அமெரிக்காவின் இந்த வரி விதிப்புக் கொள்கை, உலகளாவிய வர்த்தக அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளுக்கு சவால் விடுவதாக பல நாடுகள் கருதுகின்றன. உலக வர்த்தக அமைப்பு நாடுகளிடையே நியாயமான மற்றும் தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவிக்கிறது. ஆனால், அமெரிக்காவின் ஒருதலைப் பட்சமான வரி விதிப்பு நடவடிக்கைகள் இந்த அமைப்பின் செயல்பாட்டையும் நம்பகத் தன்மையையும் கேள்விக் குள்ளாக்கியுள்ளன.

இந்த வர்த்தகப் போர் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி மற்றும் விநியோகத்தை பல நாடுகளிலும் பரவலாக்கியுள்ளன. அதிக வரி விதிப்புகள் காரணமாக, இந்த நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி இடங்களை மாற்றியமைக்க அல்லது அதிக செலவுகளை ஏற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. இது நுகர்வோருக்கு அதிக விலையாகவும், சில சமயங்களில் பொருள்களின் பற்றாக்குறையாகவும் கூட மாறலாம்.

முடிவாக, வர்த்தகப் போர் என்பது எந்தவொரு நாட்டுக்கும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தாது. தற்காலிகமாக சில உள்நாட்டு தொழில்களுக்கு இது பயனளித்தாலும், நீண்ட கால அடிப்படையில் இது பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாகவே இருக்கும். அமெரிக்காவின் சமீபத்திய வரி விதிப்பு நடவடிக்கைகள் இந்த வர்த்தகப் போரை தீவிரப்படுத்தியுள்ளன. மேலும் உலகளாவிய பொருளாதாரம் இதன் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

நாடுகளிடையே பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒத்துழைப்பு மூலம் மட்டுமே இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியும். தடையற்ற மற்றும் நியாயமான வர்த்தகம் உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கும் அனைத்து நாடுகளின் நலனுக்கும் இன்றியமையாதது என்பதை உணர வேண்டும்.



**கலாநிதி ஏ. எல். முகம்மது அஸ்லம்,**
**இலங்கைத் திட்டமிடல் சேவை,**
**பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்,**
**பிரதேச செயலகம், சம்மாந்துறை.**

# சொற்பொழிவாளர் குமரனுக்கு கௌரவம்



சமய சொற்பொழிவு பணிக்காக வடலியடைப்பு இந்து இளைஞர் மன்றத்தினரால் அகில இலங்கை சைவப் புலவர் சங்க செயலாளர் பண்டிதர் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் கௌரவிக்கப்பட்டார்.



# அதிக வெப்பமான காலநிலை தொடர்வதால் சிறுவர்களுக்கு இதய நோய்கள் ஏற்படலாம்!

## எச்சரிக்கிறார் மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக வெப்பமான காலநிலை காணப்படுவதால் சிறுவர்களுக்கு இதய நோய்கள், மயக்கம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. பொது மக்கள், சிறுவர்களை வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் இரா.முரளீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது அதிக வெப்பமான காலநிலை காணப்படுவதால் பொது மக்கள் மேலதிகமான உடற்பயிற்சிகள், விளையாட்டு நிகழ்வுகள், உரியமுறையில் ஒழுங்குபடுத்தப்படாத களியாட்ட நிகழ்வுகள் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். போதுமான அளவு குடி தண்ணீர் அருந்த வேண்டும்.

இந்த அதிக வெப்ப தாக்கத்தில் இருந்து பொதுமக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதோடு, தேவையற்ற விதத்தில் நண்பகல் வேளைகளில் நடமாடுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் ஏற்படுகின்ற உயிரிழப்புக்கள் மற்றும் பாதிப்புகளில் இருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். கூடுதலாகச் சிறுவர்கள் விடயத்தில் அதிக அக்கறையுடன் செயல்பட வேண்டும்.

இவ்வாறான காலகட்டங்களில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றுவதைத் தவிர்க்க வேண்டும்.

வயதானவர்கள் தேவையற்ற வகையில் உடலை வருத்தும் செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும். எனவே பொதுமக்கள் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் இதன் பாதிப்புக்களில் இருந்து விடுபட முடியும்.- என்றார்.



# பூனப்பிட்டியில் குருத்தோலை ஞாயிறு!

**(உடப்பு க.மகாதேவன்)**

பூனபிட்டி புனித சாந்த லூசியா தேவாலயத்தின் குருத்தோலை ஞாயிறு பூஜைகள் இன்று (13) ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

தேவாலயத்தின் பூஜைகளை கட்டைக்காடு பங்குத் தந்தை அருட்திரு.ஜோசப் ஜீஸஸ் அடிகளார் கலந்து கொண்டு நடத்தி வைத்தார். இதில் பங்கு மக்கள் கலந்து கொண்டனர்.






# மருத்துநீர் என்றால் என்ன?

(வி.ரி.சகாதேவராஜா)

தமிழர்கள் சித்திரை வருடப்பிறப்பு தினத்தன்று மருத்துநீர் வைத்து நீராடுவது காலங் காலமாகக் கடைப்பிடிக்கும் முறையாகும்.

மருத்து நீர் என்பது தாழம்பூ, தாமரைப் பூ, மாதுளம் பூ, துளசி, விஷ்ணுக்கிரந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளை சுத்தமாக நீரில் கொதிக்க வைத்து காய்ச்சி எடுப்பதாகும்.

எனினும் நடைமுறையில் சில பிரதேசங்களில் இவைகளைப் பெற்றுக் கொள்வது என்பது சாத்தியமில்லை என்பதால், இந்துக்கள், தமது வீடுகளுக்கு அருகில் கிடைக்கக் கூடிய அறுகு, துளசி, வேப்பிலை ஆகியவற்றை மஞ்சள், பால் கலந்த சுத்த நீரில் மிளகு, சுக்கு இட்டு, நன்கு கொதிக்க வைத்து காய்ச்சி சிரசிலும், பாதத்திலும் வைத்து நீராடுவது உசிதமாகும்.

இந்த வருடம் 'விசுவாவசு' புத்தாண்டு பிறக்கும் விசு புண்ணிய காலத்தில் மருத்து நீர் வைத்து ஸ்ஞானம் செய்யலாம்.

தலையில் ஆல் இலையும் காலில் இலவம் இலையும் வைத்து சித்திரை புத்தாண்டு புண்ணியகாலத்தில் நீராடினால் நற்பலன்கள் கிடைக்கும்.

மருத்து நீரை மூலிகை மருந்துக்களின் சங்கமம் என்றே கூற வேண்டும்.

# சாய்ந்தமருது பாடசாலைகளில் திண்மக் கழிவகற்றலுக்குத் தீர்வு






(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகள், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியை மாநகர சபையில் சந்தித்து பிரதேச நலன்சார்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்த சந்திப்பில் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் டாக்டர் எம்.எச்.கே. சனூஸ் காரியப்பர், செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ், உப செயலாளர் எசார் மீராசாஹிப், சபை உறுப்பினர்களான பேராசிரியர் எம்.ஐ.எம். ஹிலால், எம்.எஸ். பஸ்லுர் ரஹ்மான் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது சாய்ந்தமருது பிரதேசத்தை மையப்படுத்தி பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது. அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாகத் திண்மக்கழிவகற்றல், வடிகான் பராமரிப்பு உள்ளிட்ட சேவைகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் மூலோபாய திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது. சில விடயங்களுக்கு சுமூக தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன. விஷேடமாக பாடசாலைகளின் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் நிலவும் அசௌகரியங்களை நிவர்த்தி செய்து, இலகுபடுத்துவதற்கான பொறிமுறைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டது.

அதேவேளை, திண்மக்கழிவகற்றல் சேவையை முன்னெடுப்பதில் மாநகர சபை எதிர் நோக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஆணையாளர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

நிதி மற்றும் வாகனப் பற்றாக்குறை, மாநகர சபை எல்லைக்குள் குப்பைகளை கொட்டுவதற்கு பொருத்தமான இடங்கள் இல்லாமை, அட்டாளைச்சேனை, பள்ளக்காட்டில் கூட தற்போது குப்பைகளை கொட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

இவற்றுக்கு மத்தியில் முடியுமானவரை திண்மக்கழிவகற்றல் சேவையை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும் என்று வலியுறுத்திய ஆணையாளர், இது விடயத்தில் பள்ளிவாசல் நிர்வாகம் முன்னின்று மக்களுக்கு தெளிவூட்டி, விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆணையாளர் முன்வைத்த கருத்துக்களுடன் உடன்பட்ட பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர், மாநகர சபையின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு மக்களின் ஒத்துழைப்புகளை பெற்றுத் தருவதற்கு பள்ளிவாசல் நிர்வாகம் முன்னிற்கும் என்று உறுதியளித்துள்ளனர். இதன்போது சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலுக்கு குப்பைகளை தரம் பிரித்து சேகரிப்பதற்கான வர்ண குப்பைத் தொட்டிகள், ஆணையாளரால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# மியன்மாரில் மீண்டும் நிலநடுக்கம் இந்தியா, தஜிகிஸ்தானிலும் தாக்கம்





இந்தியா, மியன்மார் மற்றும் தஜிகிஸ்தானில் இன்று காலை ஒரு மணிநேரத்துக்குள் நான்கு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இமயமலை நகரம் முதல் மத்திய ஆசியாவின் நகரம் வரையில் வீடுகள் மற்றும் கட்டடங்களை குலுங்கச் செய்த இந்த நிலநடுக்கங்கள், அச்சத்தையும் பதற்றத்தையும் உருவாக்கியுள்ளன.

முதல் நிலநடுக்கம் இமாச்சலப்பிரதேசத்தின் மண்டியில் காலை 9 மணிக்கு உணரப்பட்டது. பூமியில் 5 கி.மீ., ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலஅதிர்வு ரிக்டர் அளவில் 3.4 ஆக பதிவாகியுள்ளதாக தேசிய நிலஅதிர்வு மையம் (என்.சி.எஸ்) தெரிவித்துள்ளது. மிகச் சிறியதாக இது தெரிந்தாலும், குடியிருப்பாளர்கள் உணரும் அளவுக்கு நிலநடுக்கம் வலுவானதாக இருந்துள்ளது. இதுவரை உயிரிழப்பு, காயம் மற்றும் சேதங்கள் குறித்து எந்த தகவலும் பதிவாகவில்லை.

இதற்கு சிறிது நேரத்துக்கு பின்பு மத்திய மியன்மாரின் மெய்க்டிலா அருகே 5.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கும் ஏற்பட்டது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 28 ஆம் திகதி மியான்மரில் 7.7 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பூகம்ப பாதிப்பில் சுமார் 3,600 பேர் உயிரிழந்தனர், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். இந்த பூகம்பத்துக்கு பின்பு ஏற்பட்ட நிலநடுக்கம் இன்று ஏற்பட்டதே.

மார்ச் பூகம்பத்தின் பாதிப்பில் இருந்து இன்னும் மீளாத மாண்டலே மற்றும் நேபிடோ நகரங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது. இந்த புதிய நிலநடுக்கம் சற்று வலுவாக இருந்ததால் மக்கள் வீடுகள், கட்டிடத்தை விட்டு வெளியேறினார். இரண்டு கூடியிருப்புகளின் கூரைகள் தேசமடைந்தன. இந்த நிலநடுக்கத்தால் புதிய உயிரிழப்புகள் பதிவாகவில்லை என்றாலும் முந்தை பாதிப்புகளால் திணறி வரும் நாட்டில் இந்த புதிய நிலநடுக்கம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல் தஜிகிஸ்தானில் காலை 9.54 மணிக்கு ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமியில் 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 6.4 ஆக பதிவானது. அருகில் உள்ள நகரங்களில் உள்ள மக்களும் நிலநடுக்கத்தை உணர்ந்ததாக தெரிவித்தனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சில கடைகள் மற்றும் பள்ளிகளில் உள்ளவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து காலை 10.36 மணிக்கு மற்றொரு நிலநடுக்கம் தாக்கியது. 3.9 ஆக பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கமும் 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்டது. இது அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மின்னணு சாதனங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்தது டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம்

ஸ்மார்ட் கைபேசிகள், கணினிகள் மற்றும் வேறு சில மின்னணு சாதனங்களுக்கு சீன இறக்குமதிகள் மீது விதிக்கப்படும் 125 சதவீத வரிகள் உள்ளிட்ட பரஸ்பர வரிகளிலிருந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் விலக்கு அளித்துள்ளது.

பெரும்பாலான நாடுகள் மீதான அமெரிக்காவின் 10 சதவீத உலகளாவிய வரியிலிருந்தும், மிகப் பெரிய சீன இறக்குமதி வரியிலிருந்தும் சில பொருட்கள் விலக்கப்படும் என்பதை விளக்கும் ஒரு அறிவிப்பை அமெரிக்க சுங்கம் வெளியிட்டுள்ளது.

மின்னணு சாதனங்களில் பல வகையானவை சீனாவில் தயாரிக்கப்படுவதால், அவற்றின் விலை உயரக்கூடும் என்ற அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களின் கவலைகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



சீனா மீதான அமெரிக்காவின் வரிகளில் இது முதலாவது குறிப்பிடத்தக்க நிவாரணமாகும்.



# அம்மன் கோவிலில் கண் திறந்த சிலை

நெல்லை மாவட்டம் திசையன்விளை ஆஞ்சநேயர் கோவில் அருகில் தெற்கு தெரு மாரியம்மன் கோவில் அமைந் துள்ளது.

இக்கோவிலில் நேற்று இரவில் வழக்கம்போல் பூஜைகள் முடிந்ததும் கோவிலை பூசாரி பூட்டிச்சென்றனர்.

பின்னர் கோவிலுக்கு தாமதமாக வந்த பக்தர் ஒருவர் சாமி கும்பிடுவதற்காக கோவில் கதவின் துவாரம் வழியாக அம்மனை பார்த்து வழிபட்டார்.

அப்போது அம்மன் சிலையில் கண் திறந்து இருப்பதாக பக்தி பரவசத்துடன் அக்கம் பக்கத்தினரிடம் தெரிவித்தார்.

மேலும், அம்மன் சிலையை புகைப்படம் எடுத்தார். இது சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இதனால் கோவிலில் பக்தர்கள் குவிந்து சுவாமி தரிசனம் செய்த னர்.

இரவில் கோவில் நடை அடைக்கப்பட்ட நிலையில் இன்று காலை மீண்டும் கோவில் நடை திறக்கப்பட்டது.

அப்போதும் அம்மனின் கண் திறந்து இருந்ததாகவும், கோவில் பூசாரி அம்மனுக்கு பாலாபிஷேகம் செய்ததும் கண் மூடியதாகவும் அருகே வசித்து வரும் பக்தர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.





# அண்ணாமலை புயல், நான் தென்றல்: பா.ஜ.கவின் மாநில தலைவர் கருத்து

அண்ணாமலை புயல், நான் தென்றல் என்று பா.ஜ.க. தலைவராக பொறுப்பேற்ற நயினார் நாகேந்திரன் என்று தெரிவித்துள்ளார்.

சென்னை வானகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழக பாஜக தலைவராக நயினார் நாகேந்திரன் பொறுப்பேற்றார். தேசிய பொதுக்குழு உறுப்பினராக அண்ணாமலை தேர்வு செய்யப்பட்டார்.

தமிழக பா.ஜ.கவில் உட்கட்சித் தேர்தல் கடந்த ஜனவரி மாதம் தொடங்கி நடைபெற்று வந்தது. இதன் தொடர்ச்சியாக மாநில தலைவர் மற்றும் தேசிய பொதுக்குழு உறுப்பினர்கள் பதவிக்கு நேற்று முன்தினம் விருப்பமனு தாக்கல் நடைபெற்றது. அப்போது தமிழக பா.ஜ.க தலைவர் பதவிக்கு அக்கட்சியின் சட்டப்பேரவைக்குழுத்தலைவர்நயினார்நாகேந்திரன் விருப்பமனு வழங்கினார். வேறு யாரும் மனு அளிக்காததால் போட்டியின்றி அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த நிகழ்வின் நிறைவாக நயினார் நாகேந்திரன் பேசுகையில்,

“உலகத்திலேயே மிகப்பெரிய கட்சி பா.ஜ.க. அந்த கட்சி கொடி தமிழகம் எல்லாம் பறக்க வேண்டும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட எம்.எல்.ஏக்களையும், 250 இற்கும் மேற்பட்ட எம்.பிக்களையும் கொண்ட மிகப்பெரிய கட்சி பா.ஜ.க. என் மீது நம்பிக்கை வைத்து தலைமை தொண்டனாக தேர்ந்தெடுத்தற்கு நன்றிகள்.

முந்தைய தலைவர்கள் கோபுரம் போல ஒவ்வொருவரும் கட்சியை வளர்த்தனர். “என் மண் என் மக்கள்” யாத்திரை மூலமாக தமிழகத்தின் பட்டி தொட்டி எல்லாம் நடந்தே சென்று கோபுரத்தை கட்டி அதன் மேலே எல்லா கலசங்களையும் வைத்துள்ளார் அண்ணாமலை. இப்போது நமக்கு வேலை கும்பாபிஷேகம் செய்ய வேண்டியது மட்டும்தான். அந்த கும்பாபிஷேகத்தை அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறும், சட்டப்பேரவை தேர்தலில் நடத்தப் போகிறோம். அப்போது கும்பாபிஷேகம் நடைபெறப் போகிறதா அல்லது திருச்செந்தூர் சூரசம்ஹாரம் நடைபெறப் போகிறதா நாடு ஆள்வோர் காடு ஆளப்போகிறார்களா என்பதை எல்லாம் இறைவன்தான் முடிவு செய்ய வேண்டும்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சொன்னதை போல 2026 சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி மலரும், தமிழகத்தில் தாமரை மலர்ந்தே தீரும். முன்பு 4 எம்.பி. வென்றோம், வரும் தேர்தல்களில் 40 சீட்டுகளையும் வெல்வோம். அண்ணாமலையின் பாணி வேறு. எனது பாணி வேறு. அவர் புயல். நான் தென்றலாகத்தான் இருக்க முடியும்.” என்றார்.

# சர்ச்சை கருத்துக்கு மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டார் பொன்முடி



கூட்டம் ஒன்றில் சர்ச்சையாக பேசியமை தொடர்பாக அமைச்சர் பொன்முடி மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்டுள்ளார்.

தி.மு.க. முன்னாள் துணைப் பொதுச்செயலாளரும், அமைச்சருமான பொன்முடி கூட்டம் ஒன்றில் பேசிய கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியது. இவரின் கருத்துக்கு பலரும் கண்டனங்களை தெரிவித்தனர்.

இந்நிலையில், தான் பேசிய சர்ச்சை கருத்துக்கு பொன்முடி மன்னிப்பு கேட்டு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர், ”தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்திய ஒரு உள் அரங்கக் கூட்டத்தில், தகாத பொருளில் தவறான சொற்களைப் பயன்படுத்தி நான் பேசிய பேச்சுக்கு மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தகாத கருத்தை நான் பேசியமை குறித்து உடனடியாக மனப்பூர்வமாக வருந்தினேன். நீண்ட காலம் பொது வாழ்க்கையில் உள்ள எனக்கு இதுபோன்ற தடுமாற்றம் ஏற்பட்டது குறித்து நான் மிகவும் வருந்துகிறேன்.

பலருடைய மனதைப் புண்படுத்தும் வகையில் இப்பேச்சு அமைந்து விட்டது குறித்தும், அவர்கள் தலைகுனியும் சூழல் ஏற்பட்டது குறித்தும் நான் மிகவும் மனம் வருந்துகிறேன்.

மனம் புண்பட்ட அனைவரிடமும் நான் பேசிய பேச்சுக்கு மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.” என்று கூறியுள்ளார்.

பக்கங்கள் 04

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 13/04/2025

**ட்ரம்ப், எலோன் மஸ்க்கை வில்லன்களாக சித்தரித்து கனடாவில் புத்தகம் வெளியீடு**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்,தொழிலதிபர் எலோன் மஸ்க்கை வில்லன்களாக சித்திரித்து கனடாவில் வெளியிடப்பட்ட காமிக்ஸ் புத்தகம் உலகளவில் பேசுபொருளாகி உள்ளது.

அமெரிக்கா 02



# வெளிநாட்டு மாணவர்களை அலைக்கழித்த கனேடிய இளவரசர் எட்வர்ட் தீவு மாகாணம்

04

**கனேடிய மாகாணமொன்றில், புலம்பெயர்தல் கொள்கைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், சென்ற ஆண்டு, வெளிநாட்டு மாணவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தனர்.**

**கனடாவின் Prince Edward Island மாகாணத்தில் புலம்பெயர் கொள்கைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களால் தங்கள் எதிர்காலமே கேள்விக்குறியானதால், அந்த கொள்கை மாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இந்திய மாணவர்கள் உட்பல வெளிநாட்டு மாணவர்கள் பலர் 2024ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வந்தார்கள்.**

**ஆனால், அந்த விடயம் அப்படியே மறக்கப்பட்டு போனது. என்றாலும், மாணவர்களை அலைக்கழித்ததன் விளைவை அந்த மாகாணத்திலுள்ள கல்லூரிகள் அனுபவிக்கத் துவங்கியுள்ளன என தற்போது தெரியவந்துள்ளது.**

ஆம், Prince Edward Island மாகாணத்திலேயே பிரபலமான, பெரிய கல்லூரியான Holland கல்லூரி, சர்வதேச மாணவர்கள் எண்ணிக்கை குறைந்ததால், பல பாடப்பிரிவுகளை மூடும் நிலைக்கு ஆளாகியுள்ளது.

800 வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்று வந்த நிலைமை மாறி, 2026 ஆம் ஆண்டில், வெறும் 140 வெளிநாட்டு மாணவர்கள் மட்டுமே கல்லூரியில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 83 சதவிகித குறைவு ஆகும்.

அதனால், கல்லூரியின் வருவாய் கணிசமாக குறைய உள்ளதால், ஆசிரியர்கள் உட்பட சுமார் 35 ஊழியர்கள் பணியிழக்கும் நிலை உருவாகியுள்ளது. எனவே, வேறு வழியில்லாமல், அந்தக் கல்லூரியில் செயல்பட்டுவந்த எட்டு பாடப்பிரிவுகள் நீக்கப்பட உள்ளன.

பிரித்தானியா உட்பட பல நாடுகளில் வெளிநாட்டு மாணவர்களை நம்பித்தான் கல்லூரிகள் இயங்குகின்றன.

வெளிநாட்டு மாணவர்கள் பல மடங்கு கல்விக் கட்டணம் செலுத்துவதால் தான் உள்நாட்டு மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் கல்வி கற்கவே முடிகிறது.

அப்படியிருந்தும், கனடா வெளிநாட்டு மாணவர்களை அலைக்கழித்தது. தற்போது, அதன் பலனை கனடா அனுபவிக்கத் துவங்கியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

04



# காஸாவில் இனப்படுகொலை இடம்பெற்றதாக கருத்து: கனடா பிரதமருக்கு இஸ்ரேல் பிரதமர் கடும் கண்டனம்

காஸாவில் இனப்படுகொலை நடப்பதாகக் கூறப்பட்டதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கருத்து தெரிவித்த கனடா பிரதமர் மார்க் கார்னிக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து எக்ஸ் ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"கனடா எப்போதுமே நாகரிக உலகுக்கே ஆதரவு அளித்துவந்தது அதைத்தான் அந்த நாட்டின் தற்போதைய பிரதமர் மார்க் கார்னியும் பின்பற்ற வேண்டும்.

ஆனால், 'காட்டுமிராண்டிகளான' ஹமாஸுடன் போரிட்டுவரும் ஜனநாயக நாடான, உலகின் ஒரே யூத தேசமான இஸ்ரேலை அவர் விமர்சிக்கிறார். அவர் தனது வார்த்தைகளைத் திரும்பப் பெற வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, கனடாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது இஸ்ரேலுக்கு எதிராக கோஷம் எழுப்பிய ஒருவர், 'காஸாவில் இனப் படுகொலை நடைபெறுகிறது' என்றார். அதற்கு, 'அது எனக்கும் தெரியும் அதனால்தான் இஸ்ரேலுக்கு ஆயுத ஏற்றுமதி தடை விதித்துள்ளோம்' என்று கார்னி பதிலளித்தார்.

இதனை கூட்டம் ஆரவாரத்துடன் வரவேற்றது. இந்த விவகாரம் சர்ச்சைக்குள்ளானதைத் தொடர்ந்து, 'கூட்டத்தில் இருந்தவர் கூறியது எனக்குக் கேட்கவில்லை. இஸ்ரேலுக்கு ஆயுத ஏற்றுமதி தடை இருக்கும் உண்மை நிலவரத்தைத்தான் சொன்னேன்' என்று கூறி மார்க் கார்னி சமாளிக்க முயன்றார்.

இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளாத நெதன்யாகு, மேடையில் கூறிய வார்த்தைகளை மார்க் கார்னி திரும்பப் பெற வேண்டும் என்று தற்போது வலியுறுத்தியுள்ளார்.


## ட்ரம்பஸ், எலோன்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதிலிருந்து, பல நாடுகள் மீதும் ஏதேனும் ஒரு சர்ச்சைக் கருத்தை அவ்வப்போது கூறி வருகிறார். அண்டை நாடான கனடாவை, அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக்கவும் முயற்சி செய்து வருகிறார்.

இருப்பினும், ட்ரம்ப்பின் நடவடிக்கைகளுக்கு கனடாவும் பதிலடி கொடுத்து வருகிறது. கனடா மீது அமெரிக்கா விதித்த வரிக்கு பதிலடியாக, தானும் வரி விதிப்பதாக கனடா அறிவித்தது.

இந்த நிலையில், கனடாவில் இருந்து காமிக்ஸ் புத்தகமான கேப்டன் கனக் கதையில் டொனால்ட் ட்ரம்ப்பை வில்லனாகச் சித்திரித்து வெளியிட்டுள்ளது. அதுமட்டுமின்றி, எலோன் மஸ்க்கை ட்ரம்ப்பின் நண்பராகவும் இரண்டாம்தர வில்லனாகவும் சித்திரித்து வெளியிட்டுள்ளது.






# கனடாவில் பொலிஸ் அதிகாரிகளுக்கு தீ வைத்த நபர்: காணொலி வெளியானது

கனடாவில் கைது முயற்சியின் போது வான்கூவர் பொலிஸ் அதிகாரிகளுக்கு தீ வைத்த நபர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

வான்கூவரில் பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு தீ வைத்த வன்முறை சம்பவத்தில் 40 வயதுடைய ஜோர்டான் பால் கேம்பல் மியூச்சுவல் என்பவர் மீது அதிகாரப்பூர்வமாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வான்கூவர் பொலிஸ் கடந்த வெள்ளிக்கிழமை இரவு குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தியது, மேலும் சனிக்கிழமை காலை கூடுதல் விவரங்களை வெளியிட்டுள்ளது.

வியாழக்கிழமை இரவு டவுன்டவுன் ஈஸ்ட்சைட் பகுதியில் நடந்த சம்பவத்தில், ஒரு பொலிஸ் அதிகாரியை தாக்கியமை மற்றும் பொலிஸ் அதிகாரியை தடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளை ஜோர்டான் பால் கேம்பலை எதிர்கொள்கிறார்.

பாதசாரிகள் கடக்கும் விதிமுறைகளை மீறியதற்காக ஜோர்டான் பால் கேம்பலை கைது செய்ய முயன்ற அதிகாரிகள் மீது அவர் தீப்பிடிக்கக் கூடிய பொருளைப் பயன்படுத்தி அவர்களின் சீருடைகளை தீயிட்டு, பின்னர் தப்பிக்க முயன்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு காணொலியில் குழப்பமான காட்சி பதிவாகியுள்ளன, இதில் ஆடைகள் தீப்பிடித்த ஒரு நபரை அதிகாரிகள் துரத்துவது தெரிகிறது. பின்னர் அந்த காணொலியில் அதிகாரிகள் சந்தேக நபரை கைவிலங்கிட்டு அழைத்துச் செல்லும் காட்சி காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்திற்கு முன்பு, ஜோர்டான் பால் பத்து நிலுவையில் உள்ள கைது உத்தரவுகளில் தேடப்பட்டு வந்தார் என கூறப்படுகிறது.

இந்நிலையில், நீதிமன்ற பதிவுகளின் படி, ஏப்ரல் 17ஆம் திகதி வியாழக்கிழமை அவருக்கு பிணை விசாரணை நடைபெற உள்ளது.











# முன்சி டெலாவேர் நேஷன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் பலி

கனடாவின் முன்சி டெலாவேர் நேஷன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 24 வயது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜுூபிலி சாலையில், தோமிகோ சாலை அருகே பெண் ஒருவர் வாகனத்தின் அருகில் சலனமற்றிருக்கிறார் என ஒன்டாரியோ மாகாண பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த அதிகாரிகள் மேற்படி பெண்ணுக்கு உயிர் காப்பு முதலுதவிகள் வழங்கிய போதிலும் சிகிச்சை பலனின்றி அந்த பெண் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்தில் தொடர்புடைய இரு சந்தேகநபர்களும் திருடப்பட்ட வாகனத்துடன் தப்பிச் சென்ற நிலையில் பொலிஸார் அவர்களை கைது செய்துள்ளனர்.



